பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் ஈழநாதம்

Registered as a Newspaper பக்கங்கள்: 4 விலை ரூபா 6·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

## பெறுமதிமிக்க உபகரணங்கள் கொழும்பில் தொடர்ந்தும் தவம்

பிரிட்டனால் யாழ். போதனா மருத்துவமனைக்கு அன்பளிப்பு செய்யப்பட்ட மருத்துவ உபகரணங்கள் மற்றும் 200 கிலோ வாற்று மின் பிறப்பாக்கி என்பன கப்பல் வசதி இன்மையால் தொடர்ந்தும் கொழும்பில் முடங்கிக் கிடக்கின்றன. பிரிட்டன், யாழ். போதனா மருத்துவ மனைக்கும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆளுமைக்குட்பட்ட மருத்துவமனைகளுக்கும்மருத்துவ உபகரணங்கள் மற்றும் அம்புலன்ஸ் வண்டி, பாரிய மின்பிறப் (4-ம் பக்கம் பார்க்க)

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆவணி 05 21-08-94 ஞாயிற்றுக்கிழமை ஓசை 184

# யாழ். மாவட்டத்தில் நடந்த தேர்தல்; சர்வதேச கண்காணிப்புக் குழு அதிருப்தி

## வடமராட்சி கடற்பரப்பில் மீனவர் மீது தாக்குதல்

### ஒருவர் படுகாயமடைந்தார்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு உடுத்துறை கடலில் தொழில் புரிந்த மீனவர் ஒருவர் சிறிலங்கா கடற்படையினரின் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்தார்-

உடுத்துறை கடற்பகுதியில் நேற்று காலை 4-00 மணியளவில் ரோந்து சென்ற கடற்படையினர் மீனவர்கள் மீது குறிவைத்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் அதே (4 ஆம் பக்கம் பார்க்க)

## கரையோரப்பகுதி நோக்கி கடற்படை பீரங்கித் தாக்கு

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை தொண்டமனாறு கரைக்குடியிருப்புக்கள் மீதும் கடலில் தொழில் செய்த மீனவர்கள் மீதும் சிறிலங்கா கடற்படையினர் இரவு நேரத்தில் அகோர பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11.00 மணியளவில் நடைபெற்றது. வடமராட்சி வடக்கு கடற்பகுதியில் நடமாடிய கடற்படையினர் மீனவர்கள் மீது கண் (4 ஆம் பக்கம் பார்க்க)

## உயர்தர பரீட்சை 2-ம் கட்டம் நாளை

## யுத்தம் முடியும் வரை தேர்தல் நடத்தக் கூடாதெனவும் சிபார்சு

யாழ் மாவட்டத்தில் நடத்தப்பட்ட தேர்தல் குறித்து சர்வதேச கண்காணிப்புக்குழு தேர்தல் தொடர்பான தனது அறிக்கையில் அதிருப்தி தெரிவித்துள்ளது இம் மாவட்டத்தில் நடத்தப்பட்ட தேர்தலில் மூன்று வீதத்திற்குக் குறைவான மக்களே வாக்களித்ததாகத் தெரிவித்துள்ள அக்குழு யாழ் மாவட்டத்தில் போர் முடிவடையும் வரை தேர்தல் எதுவும் நடத்தக் கூடாது எனவும் சிபார்சு செய்துள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது, ஈ.பி.டி.பி. போன்ற ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களை களையச் செய்யவும், தேர்தல் நடக்கும் இடங்களுக்கு காவலுக்கு இவர்களை வைப்பதையும் தவிர்க்கவேண்டும் என்றும் மேலும், தேர்தல் ஆணையாளர், புலிகளின் கட்டுப்பாட்டிலிருக்கும் இடங்களில், வாக் (4ஆம் பக்கம் பார்க்க)

## பலாலி வந்த தேர்தல் அதிகாரிகள் கடமையில் ஈடுபட முடியாது திரும்பினர்

(கொழும்பு)

யாழ்ப்பாணம் சென்று தேர்தல் கடமைகளில் ஈடுபட பலாலி சென்ற ஐம்பது பேரும் அங்கு இறங்க முடியாத சூழ்நிலையால் கடந்த ஞாயிறன்று மீளவும் திரும்பிவிட்டதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்களில் 20பேர் அனுராதபுரத்துக்கும் ஏனைய 30 பேர் திருகோணமலைக்கும் அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்களில் திருமலை சென்றோர் அங்கு திருமலை அரச அதிபரை சந்தித்து நிலைமைகளை எடுத்துக் கூறினர்.

## சந்திரிகா புன்னகை பற்றி டெயிலி நியூஸ் வர்ணனை

### ஆட்சி மாற்றம் பற்றி பி பி.ஸி நிருப

(கொழும்பு)

ஆட்சிமாற்றம் மிகமிக சுமுகமாக நடந்துவிட்டது. தோல்வியடைந்தாலும் ஆட்சியை ஐ. தே. க. விட்டுக் கொடுத்துவிடாது என்ற அச்சம் பொய்யாகிவிட்டது. சென்ற வியாழக்கிழமை பத்திரிகையாளர்கள் பிரதமரின் அதிகாரபூர்வ இல்லத்துக்கு சென்றார்கள். ரணில் விக்கிரமசிங்காவின் செய்தியாளர் கூட்டம் நடைபெற்றது. வெள்ளிக்கிழமை சென்றபோது சந்திரிகா குமாரணதுங்கவின் செய்தியாளர் கூட்டம் நடைபெற்றது. அரசின் அதிகார ( 4 ஆம் பக்கம் பார்க்க )

## பாதுகாப்பு அமைச்சு உட்பட அமைச்சு உயரதிகாரிகள் மாற்றம் செய்யப்படலாம்

(கொழும்பு)

சிறிலங்காவில் நிகழ்ந்த ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சு உயர் அதிகாரிகள் உட்பட பல அமைச்சுக்களின் உயர் அதிகாரிகள் பலர் பதவி விலக்கப்படலாம் என பி. பி. ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

இதன் வரிசையில் தற்போதுள்ள திட்டம் மற்றும் கொள்கை வகுப்புச் செயலாளர், ஐ. தே. கட்சியின் தேர்தல் அறிக்கையைத் தயாரித்ததோடு மக்கள் கூட்டணியின் ( 3 ஆம் பக்கம் பார்க்க )

## ஜனாதிபதி எப்பொழுதும்

அங்கு இறங்க முடியாத ஒரு நிலையால் கடந்த ஞாயி

ராதபுரத்துக்கும் ஏனைய 30

களை எடுத்துக் கூறினர்,

# 2-ம் கட்டம் நாளை

(கொழும்பு)

க. பொ. த உயர்தரப் பரீட்சையின் இரண்டாவது கட்டம் நாளை திங்கள் ஆரம்பமாகிறது. அடுத்த மாதம் முதலாம் திகதி வரை இது நீடிக்கும் என பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

திங்கள் காலை கலைப்பரீட்சைகள் ஆரம்பிக்கின்றன. கால அட்டவணையில் எவ்வித மாற்றமும் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்

இதேவேளை இரண்டாம் கட்ட க. பொ. த உயர்தர பரீட்சைக்கான யாழ் மாவட்ட பரீட்சை நிலையங்களுக்குரிய வினாத்தாள்கள் இன்று வந்து சேரும் என யாழ். அரச அதி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ. தே. க. அரசின் ஊழல் பற்றி பூர்வாங்க விசாரணை ஆரம்பம்

ஐக்கிய தேசியக் கட்சியின் பதினேழு ஆண்டுகால ஆட்சியில் நடைபெற்ற ஊழல் விரயம் அதிகார துஷ்பிரயோகம் போன்ற விடயங்களை விசாரிப்பதற்காக ஒரு விசேட ஆணைக்குழுவை நியமிப்பது தொடர்பான பூர்வாங்க வேலைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட இருப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இவ் விசாரணைக்குழுவின் முன்னால் பல ஐ. தே. க. அமைச்சர்களும் உறுப்பினர்களும் செல்லவேண்டி ஏற்படும் எனவும் பலர் குற்றவாளிகளாகக் காணப்படும் சந்தர்ப்பங்கள் இருப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்,

# ஜனாதிபதி எப்பொழுதும் சந்திரிகாவிற்கு இடையூறே

(கொழும்பு)

இனப்பிரச்சினையை தீர்க்க புதிய பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க முயற்சிகளை மேற்கொண்டாலும், பாதுகாப்பு அமைச்சை தன் வசம் வைத்துள்ள ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க இம்முயற்சிகளுக்கு சவாலாகவே இருப்பார் என வெரித்தாஸ் வானொலி தெரிவித்துள்ளது.

பதினேழு ஆண்டு காலம் நீடித்த போரை இராணுவ ரீதியாக தீர்க்க முயன்ற ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஜனாதிபதி தனது கையிலேயே அதிகாரத்தை வைத்

( 3 ஆம் பக்கம் பார்க்க )

# முல்லையில் புலிகள் அதிரடி; இரு சிப்பாய்கள் பலி; ஆயுதம் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைமாவட்டம் சாம்பள் குளம் இராணுவ முகாமிற்கும் சோமபாலா இராணுவ முகாமிற்கும் இடையில் வைத்து நேற்று முன்தினம் புலிகள் நடத்திய பதுங்கித் தாக்குதலில் இரண்டு சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஏனையோர் தப்பி ஓடி விட்டனர்.

இவ்விரு முகாம்களுக்குமிடையில் ரோந்து சென்று கொண்டிருந்த இராணுவத்தினர் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டது இதன் போது அவர்களிடமிருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன இத்தாக்குதலின் போது புலிகளின் தரப்பில் சேதம் எதுவுமில்லை.

- ★ ரி-56 புதியவடிவம் — 02
- ★ அதற்குரிய ரவைக்கூடுகள் — 06
- ★ நடுத்தர ரவைகள் — 101
- ★ ஏ கே. கோல்சர் — 02
- ★ ஜே. ஆர். கைக்குண்டு — 03

என்பனவே கைப்பற்றப்பட்டனவாகும்.

# தேர்தல் வன்முறைகள் நீடிப்பு; கூடுதல் நேர ஊரடங்கு அறிவிப்பு

## தேர்தலின் பின் கத்திக்குத்துக்கு ஆறுபேர் பலி

(கொழும்பு)

கொழும்பிலும் இதர பகுதிகளிலும் அரசியற் கட்சிகளுக்கிடையே ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து நேற்று நண்பகலிலிருந்து ஊரங்குச் சட்டம் அமுலாக்கப்பட்டுள்ளது,

நேற்றுக் காலை ஊரடங்குச்சட்டம் நீக்கப்பட்டாலும் வன்முறைகள் இடம்பெறலாமென கருதப்பட்டே நேற்று நண்பகல் ஊரடங்குச் சட்டம் மீளவும் அமுலுக்கு கொண்டு வரப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இன்று காலை ஊரங்குச் சட்டம் நீக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்பகுதியில் நேற்று முன்தினம் தேர்தலுக்கு பிந்திய வன்செயல்களினால் இருவர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## 'நரோமா' பயணிகளுக்கு

(யாழ்ப்பாணம்)

''நரோமா'' கப்பலில் பயணம் செய்ய பெயர் பதிவு செய்தவர்கள் இன்று காலை

(4ஆம் பக்கம் பார்க்க)

## பொறிவெடியில் சிக்கிய பொலிஸ் பலி

(கொழும்பு)

குச்சவெளி, 6-ம் கட்டைப் பகுதியில் பொறிவெடியில் சிக்கி ஒரு பொலிசார் கொல்லப்பட்டார்- கடந்த திங்களன்று இச்சம்பவம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது-

# எதிர்க்கட்சித் தலைவர் யார்? புதன்கிழமையன்று தெரியவரும்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவரைத் தெரிவு செய்யும் முகமாக, எதிர்வரும் புதன்கிழமை ஐக்கிய தேசியக் கட்சியினர் கொழும்பில் கூடவுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ள உள்ள இக்கூட்டத்தில்சிறிலங்காவின்10-வது பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித்தலவர் தெரிவு செய்யப்படவுள்ளார்.

இப்பதவிக்கு ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் மத்தியில் போட்டி ஏற்படலாம் என தெரிய வந்துள்ளது. சிறிலங்காவின் மூன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் முன்னாள் அமைச்சர் காமினி திசாநாயக்காவிற்கும் இடையில் போட்டி நிலவும் என செய்திகள் தெரிவிக்கின்றன.

எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு தான் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ள காமினி திசாநாயக்க தனக்கு போட்டி எதுவும் ஏற்படின் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் இரகசிய வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# தெற்கில் இனப்பிரச்சினை தீர்விற்கு பலமான ஆதரவு இருப்பதாகஇல்லை

## பி. பி. ஸி. செய்தியாளர்

இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு எடுக்கப்படும் எந்தவிதமான உண்மையான முயற்சிக்கும் தெற்கேயிருந்து பலத்த ஆதரவு இல்லை என, பி. பி. ஸி. செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னி தெரிவித்தார்.

வடக்கே நடைபெறும் உள்நாட்டுப் போர் பல இலட்சம் டொலரை விழுங்குகிறது. இதனை முடிவுக்குக் கொண்டு வருவது தான் பலத்த சவால்.

எந்தவித உண்மையான முயற்சிக்கும் தெற்கேயிருந்து பலத்த ஆதரவு இல்லை; ஐ தே க. சிங்கள இனவாதத்தை தட்டியெழுப்ப முயன்று தோற்று விட்டது என்றாலும் சிங்கள இனவாதக் கட்சியான மக்கள் ஐக்கிய முன்னணி படு தோல்வி அடைந்துவிட்டது எனினும் உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டு வர தெற்கே ஆதரவைப் பெறுவது என்பது கடினமான செயலே என்று குறிப்பிட்ட அவர்,

சில வேளை அதனை

(4ஆம் பக்ககம் பார்க்க)

# அரசியல் தீர்வு காண்பதற்காக இயன்றவரையிலும் உழைப்போம்

## இனப்பிரச்சினை குறித்து பிரதமர் சந்திரிகா

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் நிகழ்ந்து கொண்டிருக்கும் பிரச்சினையை அரசியல் பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதற்காக நாம் எம்மால் இயன்ற வரை உழைப்போம் என சிறிலங்காவின் புதிய பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்தார்.

தொலைக்காட்சி மூலம்

( 4ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### இறைச்சிக்கோழி

புறொயிலர்கள், சேவல்கள், வளர்ப்புக்கு உகந்த சேவல் குஞ்சுகள், 2 மாத, 3 மாத பேட்டுக் குஞ்சுகள் விற்பனையாகிறது. வியாபாரிகளுக்கு விலைக்கழிவு உண்டு. யாழ்ப்பாணவீதி, உரும்பிராய்ச்சந்தி. (9144)

### பாலர் ஆசிரியராக--

பயிற்சி விரைவில்-க.பொ.த சாதாரணதரம் கடைசித் தகைமை சனி ஞாயிறு நேரில் வர முடியாதோர் தபால் வழியிலும் கற்கலாம். பாலர் ஆசிரியர் சங்கம், உயர் கலைக் கல்லூரி 73, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (9133)

### மிருதங்க வகுப்பு

மிருதங்க வகுப்பு வருகிற புரட்டாதி 3-9-94 அன்றிலிருந்து நடைபெறவிருக்கிறது. சேர விரும்பியோர் தொடர்பு கொள்ளவும். கோவிந்தபிள்ளை விஜயகுமார், 192/1 நாவலர் வீதி, பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (9065)

### நாவல்கள்

நல்லூர் உற்சவகால பூபாலசிங்கம் புத்தகசாலையில் செங்கை ஆழியானின் நாவல்களை 20 சதவீத விஷேச கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம் பூபாலசிங்கம் புத்தகசாலை, நல்லூர். (9105)

### வெளிவந்துவிட்டது வியாழன் மாற்றம்

PROF. T. சத்தியதாஸன் கணிப்பில்: ஏக விநியோகஸ்தர்கள் ஸ்ரீகாந் புத்தகசாலை-நல்லூர். மக்மிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம் இந்தியா ருடே 1994 ஆண்டு மலர் வெளிவந்துவிட்டது. சீவம் நீதிக்கதைகள் 3.4.5.6 ஆண்டு 5 கணிதம், தமிழ் 94 வினா விடைகள். (சி-10101)

### பொது அறிவு

பொது அறிவு நூல் வெளிவந்து விட்டது ஆக்கம்:- கலாநிதி க. குணராசா. எல்லாப்பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும் ஸ்ரீலங்கா புத்தகசாலை, பூபாலசிங்கம் புத்தகசாலை. (9106)

# விக்ரர்

உங்களுக்குத் தேவையான

- ★ றீ சார்ச்சபிள் பற்ரரி பெரியது
- ★ றீ சார்ச்சபிள் பற்ரரி சிறியது
- ★ வீடியோ கெட்டுகள்
- ★ வீடியோ கமரா கெட்டுகள்
- ★ வீடியோ கமரா பற்ரரிகள்
- ★ FM AM ரேடியோ கசற் பிளேயர்கள்
- ★ FM AM ரேடியோக்கள்
- ★ பிலிம் ரோல்

ஆகிய பொருட்களை எம்மிடம் நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

# விக்ரர்

இல: 5, தேவா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-10156)

### தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் - யாழ் மாவட்டம்

## பொது நிர்வாகசபை கூட்டம்

இடம்: **புதிய விஞ்ஞான கல்வி நிலையம்** (எழிலகம் முன்பாக)

காலம்: **22.08-94 [திங்கள்] காலை 9 மணி**

சகல கோட்டங்களின் நிர்வாக சபை உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளவும் மிக முக்கியமான விடயங்கள் ஆராயப்படவுள்ளன.

சகலகோட்ட பொருளாளர்களும் தமது சந்தா கணக்கு விபரங்களுடன் தவறாது கலந்து கொள்ளவும்.

பொதுச் செயலாளர்
யாழ். மாவட்டம்

(சி-10147)

### தமிழீழ மாவட்ட நீதிமன்று, சாவகச்சேரி.

1) பொன்னையா தங்கராசா
2) பெண் புவனேஸ்வரி தங்கராசா,
இல. 114, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

வழக்காளிகள்

வழ/இல: 16/காணி எதிர்:

## குளம் புனரமைப்பு

(கொழும்புத்துறை)

சரசாலை அனுமந்துரவு குளம் நீர் வற்றியதால் ஆடு மாடுகள் நீருக்கு அலைந்து திரிவதை கண்ணுற்ற பொது மக்களும், சரசாலை இந்து மன்றத்தினரும் கூட்டாக இணைந்து குளத்தைச் சிரமதானப்பணி மூலம் ஆழமாக வெட்டி புனரமைத்துள்ளனர்

இதனால் கால்நடை ஆடு, மாடுகளுக்கு நீர் கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக சரசாலை இந்து மன்றச்செயலாளர் திரு. க. சிவசங்கரநாதன் தெரிவித்துள்ளார்.

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு: 1915 - 10 - 20

உதிர்வு: 1994 - 07 - 22

### திருமதி இராசம்மா சிவப்பிரகாசம்

(வியாபாரிமூலை - பருத்தித்துறை)


வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வாழும் வழிகளை எமக்குக் காட்டி
அன்பு மழை சொரிந்து அரவணைத்து
அறிவினை ஊட்டி எமை வளர்த்த தெய்வமே!
உம் நினைவு எம் மனத்தில்
அணையாத தீபமாய் ஒளிரும் அம்மா!

அன்னாரின் மரணச் சடங்கில் கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்த யாவருக்கும் இதயம் நெகிழ்ந்த நன்றியை தெரிவிப்பதுடன் இன்று (21-8-94) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள், யாவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

காரையடி மணல், வியாபாரிமூலை, பருத்தித்துறை. (9153)

**கணவன், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

### மூன்றாம் ஆண்டின் நீங்கா நினைவுகளில்



# நினைவு கூருகின்றோம்...

## 21. 08. 1994 .

1989-ம் ஆண்டு இதேதினத்தில் அக்கரைப்பற்றுப் பகுதியில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோத சக்திகளுடனான சமரில் வீரச்சாவெய்திய,

**நளின்** (பிரதாப்குமார் அஜித்குமார்-தாமரைக்குளம், பொத்துவில்-அம்பாறை)

**அலன்** (சின்னத்தம்பி செல்லத்துரை-நற்பிட்டிமுனை -07, கல்முனை-அம்பாறை)

பருத்தித்துறை-தம்பசிட்டி, நாவலடிப்பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**மேஜர் டயஸ்-கந்தசாமி** (மயில்வாகனம் தவராசா - 66, ஈச்சமோட்டை-யாழ்ப்பாணம்)

**லெப்.யூசி-சுதா** (இராசதுரை சுதர்சன்-வி.எம். வீதி-பருத்தித்துறை)

1991-ம் ஆண்டு மட்டு-கொக்குவில் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மற்றும் தேசவிரோதசக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய,

**சுகந்தன்** (நாகராசா போகநாதன்- கருவேப்பங்கேணி -மட்டு)

1992-ம் ஆண்டு மட்டு-களுவாங்கேணிப் பகுதியில் இயக்கவேலை காரணமாகச் சென்றபோது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**பாலகுமரன் - உதயன்** (அருளப்பு செல்வராசா- ஆறுமுகத்தான்குடியிருப்பு, ஏறாவூர்-மட்டு)

யாழ்-மாதகல் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட ''ஒப்பரேசன்'' பூமியதிர்ச்சி நடவடிக்கையில் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**காந்தன்** (வைரமுத்து சந்திரமோகன்- 5-ம் குறிச்சி, ஏறாவூர்-மட்டு)

**2 ம் லெப்.அண்ணாநம்பி** (அண்ணலிங்கம் கைலநாதன்-மாவிட்டபுரம், தெல்லிப்பழை-யாழ்)

**நேசன்** (கார்த்திகேசு சிவநாதன்-மாசேரி வடக்கு, வரணி, கொடிகாமம் யாழ்)

**அருள்தாசன்-ஜெனி** (கதிரமலைநாதன் ரு நாதன் -சுன்னாகம் வடக்கு-யாழ்)

1993-ம் ஆண்டு யாழ்-இயக்கச்சிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் அன்பு** (கந்தசாமி கண்ணதாசன்-மீசாலை வடக்கு-கொடிகாமம்-யாழ்)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் இலங்கை-இந்திய படையினரால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10155)

புத்தகசாலை, பூபாலசிங்கம் புத்தகசாலை. (9106)

## A/L பௌதிகவியல் 94/95

தனிப்பட்ட வகுப்பாகவும், தனிப்பட்ட முறையிலும். பௌதிகவியல், தூயகணிதம், பிரயோககணிதம் பலவருடம் அனுபவம் பெற்ற ஆசிரியரினால் ஏராளமான பயிற்சிகளோடு சிறப்பாகக்கற்பிக்கப் படும். R. பாலசுப்பிரமணியம் B. Sc (Cey) Dip - in - Ed 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (9158)

## சக்திப்பசளை

சக்தி இயற்கைப்பசளை. கூட்டெரு முறையில் தயாரானது. வதிவிட வேளாண்மைக்குக் கைகொடுக்கிறது. பாவித்துப் பயன் பெறுங்கள். ஓர் மில்க்வைற் சாதனை. ஒரு கிலோ பக்கற் ரூ 10/-மட்டுமே ''மில்க்வைற்''

(சி-10150)

## தவறிவிட்டது

மங்களவதனி குணரத்தினம் ஆகிய எனது 688280 087V இலக்கம் கொண்ட அடையாள அட்டையும் பயிற்சி நெறிக்குரிய அடையாள அட்டையும் 3-8-94 அன்று கிளாலிக்கரையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப் படும். (9162)

## அநுமதிப்பரீட்சை

பிரபல பாடசாலை அநுமதிப் பரீட்சைக்கான வகுப்புகள் ஆண்டு 5 மாணவருக்கு ஆரம்பமாகியுள்ளன. அநுமதி மாதிரித் தேர்வு வினாத்தாள் (தமி. கணி. ஆங்.) 21-08-94 ஞாயிறு வெளியிடப்படும். தேவையானோர் தொடர்பு கொள்ளவும். புதிய கல்வி நிலையம் 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (9163)

---

யாழ்ப்பாணம்.

வழக்காளிகள்

**வழ/இல: 16/காணி** **எதிர்:**

**1) செல்லத்துரை சிறிகாந்தா**

**2) பெண் தனலட்சுமி சிறிகாந்தா**

இருவரும் தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

**எதிராளிகள்**

இத்தால் சகலருமறிக, இலக்கம் 114, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வழக்காளிகளான பொன்னையா தங்கராசாவும், பெண் புவனேஸ்வரி தங்கராசாவும் ஆகிய இவர்கள் தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரியைச் சேர்ந்த செல்லத்துரை சிறிகாந்தாவுக்கும் பெண் தனலட்சுமி சிறிகாந்தாவுக்கும் எதிராக இந்த நீதிமன்றிலே 16/காணி என்னும் வழக்கைத் தாக்கல் செய்துள்ளபடியாலும்,

குறித்த வழக்கிலே அணைக்கப்பட்ட 3320-ம் இலக்க ஈட்டுறுதியின் பேரால் வழக்காளிகளுக்கு ரூபா 50,000/- ம் வட்டியுமாக ஒரு குறிப்பிட்ட தொகை எதிராளிகளிடமிருந்து வருமதியாக உள்ளதாகவும். இதற்குப் பொறுப்பாக எதிராளிகள் தபாற்கந்தோர் வீதியிலமைந்துள்ளதும், இதன் கீழே ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்பட்டுள்ளதுமான ஆதனத்தை ஈடாகக் கட்டுப்படுத்தி அவ்வாதனத்தைக் கடந்த பத்து வருடங்களாக மீளாது விட்டுள்ளபடியாலும்,

வழக்காளிகள் வழக்கறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள ஆதன இடாப்பில் விபரிக்கப்பட்டுள்ளதும், இதன் பின்னால் ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படுவதுமான ஆதனத்தின் முழு உரித்தாளரும், சொந்தக்காரரும் வழக்காளிகளே என்று பிரகடனப் படுத்தி தீர்ப்பு வழங்கும்படி இம்மன்றைக் கோரியுள்ள படியாலும்,

இத்தால் சகலருமறிய வேண்டியது இதன் பின்னால் ஆதன இடாப்பில் விபரிக்கப்படும் ஆதனத்தினதும், அதற்குச் சேர்ந்தவைகளினதும். முழு உரித்தாளரும், சொந்தக்காரரும் வழக்காளிகளே என்று இம்மன்று பிரகடனப்படுத்துவதற்கு எதிராக எவராவது ஆட்சேபனை ஏதும் தெரிவிக்க விரும்பின் குறித்த ஆதனத்தில் தமக்குள்ள உரித்தை வெளிப்படுத்தி 1994ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 20-ந் திகதிக்கு முன்னதாக இம்மன்றில் நேரில் தோன்றி எழுத்தில் தெரிவிக்குமாறு இத்தால் பகிரங்க அறிவித்தல் விடப் படுகின்றது.

ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், தென்மராட்சிப் பகுதி, சாவகச்சேரிக் கோயில் பற்று, சாவகச்சேரி இறை, 'மாளிகை வளவு', நி. பர 2½. இரண்டரைக்கு எல்லை கிழக்கு: றோட்டு, வடக்கும்: றோட்டு, மேற்கு; கந்தசாமி பெண் நேசமணியின் ஆதனம், தெற்கு: இதன் மீதியாதனம், முன்னுறுதிப்படி ஆதர் பொன்னையா மகலன்டின் ஆதனம், இன்னும் இதனடங்கலும்.

**மன்றின் கட்டளைப்படி**
**பதிவாளர்**

(9154)

---



**ஆறுமுகம் கணபதிப்பிள்ளை / ஈசன்**

**மலர்வு:** 18 - 07 - 1958

**உதிர்வு:** 25 - 08 - 1991

**திதி: - 21 - 08 - 1994**

மனதினில் தினம் ஒலிக்கும்
நினைவுகளை வரிகளாக்கி
உன் வாசலுக்கு அனுப்புகிறோம்
சாவு என்ற ஓர் சொல்லில்
உன்னைத் தொலைத்துவிட்டு
காலமெல்லாம் இங்கு
கண்ணீரில் கரைகின்றோம்,
எதை மறப்போம், உன் நினைவுகளில்
எதை மறப்போம்,
உன் புன்னகை முகமும்
நாம் ''வாழ்ந்த'' அந்தக் கணங்களும்
எம் இருப்பின் இறுதிவரை
நினைவுகளில் நிலைத்திருக்கும்,
ஓம் சாந்தி!

மட்டுவில்,
சாவகச்சேரி.

என்றும் உன் அன்புப் பெற்றோர்
**- குடும்பத்தினர்**


(9155)

---

(சி-10155)

---


**வெலிங்டன் சந்திக்கருகில்!**



# UNIKCO

**COMPUTER CENTRE**

**புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன**

★ BASIC Language (GWBASIC - Including Advanced BASIC)
★ PASCAL Language
★ DBASE III PLUS and MS - DOS
★ LOTUS 1-2-3 and MS-DOS
★ WORD PROCESSING (WORDSTAR PROFESSIONAL Re / 5.5) and MS-DOS

குறிப்பு:-

★ காலை மாலை வகுப்புக்கள் நடைபெறும்
★ கட்டணங்கள் பகுதி பகுதியாகச் செலுத்தப் படலாம்
★ தமிழில் விளக்கங்கள் ★ கூடியநேர செய்முறைப் பயிற்சி

**JOIN WITH US TO STUDY THE LATEST COMPUTER TECHNOLOGY**

**ஆரம்பம்:**

வாரநாள் வகுப்புகள் 24 - 8 - 94
வார இறுதி வகுப்புகள் 27 - 8 - 94

மேலதிக விபரங்கட்கு

**இல, 37, மணிக்கூட்டு வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி-10149)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்,

## சிந்தனைக்கு..

துணிவு வளர்வது எண்ணிக்கையில் இருந்தல்ல இதயங்களில் இருந்துதான்.

- ஜோன் ட்ரைடன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 21-08-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

# தாண்டவேண்டியதடைகள் பல இன்னமும் உண்டு

இனப்பிரச்சினை விவகாரத்தில் சிறிலங்காவின் புதிய பிரதமர் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்காவின் நிலைப்பாடு ஒப்பீட்டு ரீதியில் முன்னேற்றகரமானதே. வடக்கு - கிழக்கில் இடம்பெறுவதை இனப்பிரச்சினை என்பதையும் அதற்கு அரசியல் தீர்வே காணப்பட வேண்டும் என்பதும், முன்னைய ஐ. தே. கட்சி அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் இருந்து பெருமளவில் வேறுபட்டது என்பதில் சந்தேகமில்லை.

தனது இந்நிலைப்பாட்டை, தான் பிரதமராக பதவி ஏற்றதன் பின்னர் நடத்திய முதலாவது பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் தெளிவுபடுத்தியுள்ளார். அதேசமயம் இப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்றால், யாருடன் பேச்சுக்களை நடத்த வேண்டும் என்ற அரசியல் யதார்த்தத்தையும் அவர் புரிந்து கொண்டுள்ளார். இந்தநிலையிலேயே, ''விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் முக்கிய பிரதிநிதிகள்; எனவேதான் நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு இணைந்து செயலாற்ற வருமாறு அவர்களுக்கு அழைப்பு விடுக்கிறேன்'' எனக் குறிப்பிட்டார்.

இவ்வாறாக, புதிய பிரதமர் அரசியல் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டிருப்பினும், இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் அரசியற் தீர்வு காண்பது எனின் அதற்குத் தடையாக உள்ள பல அம்சங்கள் நீக்கப்பட வேண்டும். அல்லது தாண்டப்பட வேண்டும். இதற்கு பிரதமர் இன்னமும் நீண்டதூரம் முன்னேற வேண்டிய அவசியமும் உண்டு.

ஆனால், இதற்கான தடைக்கற்களாக தமிழ் மக்களோ, அன்றி விடுதலைப் புலிகள் இயக்கமோ இருக்க மாட்டாது என்பது ஏற்கனவே உணர்த்தப்பட்டுள்ளது. நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்குத் தாம் தயாராக இருப்பதாக விடுதலைப் புலிகள் இயக்கம் ஏற்கனவே பல தடவை அறிவித்துள்ளது. தமிழ்மக்களும் இனப்பிரச்சினைக்கு சமாதான ரீதியாக ஓர் அரசியற் தீர்வு காண்பதையே விரும்புகின்றனர்.

இத்தீர்வில் தமிழ்மக்கள் எதிர்பார்ப்பது கண்ணியத்துடனும் பாதுகாப்புடனும் தமிழர் தாயகத்தில் வாழ்வதற்கான ஓர் ஏற்பாட்டையே ஆகும். அதாவது தமது

# தமிழீழ நீதிமன்ற விசேட தீர்ப்புகள் சட்ட அறிக்கைகளாக வெளிவரும்

விடுதலைப் புலிகளின் நீதி நிர்வாகத்துறையினர் ஒரு வருடத்திற்கு முன் ஆகஸ்ட் மாதம் 21-ம் திகதி சுன்னாகத்தில் தமிழீழ மாவட்ட நீதிமன்றின் கன்னி அமர்வுடன் தொடங்கிய நீதிமன்ற அமைப்பு முறை தத்துநடைபோட்டு ஈழத்தின் பல பாகங்களிலும் புதிய நீதிமன்றுகளை அமைத்து வெற்றிகரமாக இயங்கி வருவது உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது. இன்று யாழ் குடாநாட்டிலும், வன்னிப்பிரதேசத்திலும் எல்லாமாக ஆறு மாவட்ட நீதிமன்றுகள் இயங்குகின்றன. மன்னார் மாவட்டத்தில் புதிய நீதிமன்றுகள் திறப்பதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றது. தமிழீழ மாவட்ட நீதிமன்றுகள் செயற்படத் தொடங்கியதும் அதன் விளைவாக மேன்முறையீட்டு நீதிமன்று ஒன்றும் ஆரம்பிக்கப்பட வேண்டிய தேவை ஏற்பட்டது. அது மூன்று மேன்முறையீட்டு நீதியாளர்களை கொண்ட அமைப்பாக இயங்கி வருவதோடு வன்னிப் பிரதேசத்திற்கும், சஞ்சார நீதிமன்றாக சேவையாற்றி வருகின்றது.

## பின்னணி

இவ்வளவும் எவ்விதம் ஏற்பட்டன? அதன் பின்னணி என்ன? இவை உருவாவதற்கான காரணிகள் என்ன என்பவற்றை ஆராய்வது நன்மை பயக்கும். எண்பதுகளின் மத்திய பகுதியிலிருந்து சிறிலங்கா அரசின் சிவில் நிர்வாக அமைப்பு படிப்படியாக சீர்குலையத் தொடங்கியது. சிறிலங்காவின் காவல்துறை, நீதி நிர்வாகஅமைப்புகள் சிறைக்கூடம் போன்றவைகள் செயலிழந்தன. அக்கால கட்டத்தைத் தொடர்ந்து அமைதிப்படையெனக் கூறிக் கொண்டு தமிழீழத்துக்குள் நுழைந்த இந்திய ஆக்கிரமிப்பாளர்கள் சில தேசவிரோதக் கும்பல்களுடன் சேர்ந்து என்றுமில்லாதவாறு அராஜகத்தை தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விட்டனர். மக்களுக்கு பாதுகாப்பில்லை. நீதியில்லை, நியாயமில்லை ஒரே அந்தகார சூழலில் மக்கள் தவித்தனர். 'இவ்வேளையில் திடசங்கற்பத்துடனும் அர்ப்பணிப்புக்கள் மத்தியில் விடுதலைப்புலிவீரர் வீரமுடன் போராடியதனால் 1990 முற்பகுதியில் இந்தியப் படை பெரும் இழப்புடனும், அவமானத்துடனும் தம்நாடு திரும்பினர். தேசவிரோதக் கும்பல்களும் மெல்ல நழுவிவிட்டனர். இச்சூழ்நிலையில் விடுதலைப் புலிகள் தமிழீழத்தில் நிர்வாகப் பொறுப்புக்களை தலைமேல் சுமக்க வேண்டியவர்களானார்கள். இதற்கிடையில் இரண்டாவது ஈழப்போரும் தொடங்கியது.

மக்களின் அத்தியாவசியத் தேவைகளைக் கவனிக்க வேண்டிய பொறுப்பும் அத்துடன் நாட்டில் ஒழுங்கையும், அமைதியையும் காப்பாற்ற வேண்டிய கடமைகளும் விடுதலைப்புலிகளுக்கு ஏற்பட்டது. இயக்கம் சிற்றூர் அவைகளை அமைத்து மக்களின் பிணக்குகளையும், அன்றாட தேவைகளையும் பூர்த்தி செய்ய முயற்சித்தது. இந்த முறை மக்களின் அபிலாசைகளைத் தீர்ப்பதாக அமையவில்லை. அத்துடன் தமிழீழமே இறுதியான முடிவு என்ற நிலைப்பாட்டிற்கு அமைய அதற்கான உள்கட்டுமான அமைப்புக்களை உருவாக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து ஏற்கனவே வெவ்வேறு துறைகளில் நடவடிக்கைகளில் இயக்கத்தை வழி நடத்தி வரும் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் தமிழீழ காவல்துறையைக் கட்டியெழுப்பினார். இதுவரை நீதி நிர்வாகத் துறையினால் இணக்கமன்றுகள் மூலம் கையாளப்பட்டு வந்த பிணக்குகள் காவல் துறையினரிடம் பாரப்படுத்தப்பட்டது.

## உருவாக்கம்

நீதிமன்றுகளை இயக்குவதென்றால் நீதியாளர்கள் தேவை, சட்டவாளர்கள் தேவை இவர்களை உருவாக்குவதற்கு தமிழீழத்தில் சட்டக்கல்லூரி ஒன்று அமைக்கப்பட்டது. தகுதி அடிப்படையில் போராளிகள் மத்தியிலிருந்து மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். சிறிலங்கா நீதிமன்றுகளில் கடமையாற்றிய தமிழீழத்தை விட்டு வெளியேறாத சட்ட அறிஞர்களும், வேறு நிர்வாகம், முகாமைத்துவம், கணக்கியல் போன்ற துறைகளில் விசேட தகைமை பெற்றவர்களும் தமிழீழச் சட்டக்கல்லூரியில் ஆசிரியர்களாகக் கடமையாற்றினார்கள். சட்டவாளர்கள் உருவாக்கப்பட்டனர். அவர்களில் சட்டவாக்கப் பகுதிக்கும், மேன்முறையீட்டு நீதியாளர்களாகவும், மாவட்ட நீதிமன்ற நீதியாளர்களாகவும் ஏனையோர் சட்டவாளர்களாகவும் கடமையாற்றுகிறார்கள். இவர்களில் கணிசமான தொகையினர் பெண்கள் என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டும். சட்டக்கல்லூரி இரண்டாவது தொகுதிச் சட்டவாளர்களைப் பயிற்றுவிப்பதற்கான தொடர் நடவடிக்கை சென்ற மாதம் 03-ம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்போதும் தகுதி அடிப்படையில் போராளிகளில் இருந்து தான் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

> தமிழீழ நீதிமன்றுகள் செயற்பட ஆரம்பித்து இன்றுடன் ஓராண்டு நிறைவெய்துகிறது. இது தொடர்பாக நீதி நிர்வாகத்துறை நடுவப் பணியகம் விடுத்த அறிக்கையை இங்குதருகிறோம்.

## நடைமுறை

தமிழீழ நீதிமன்றுகள்என்று சொல்லும் போது அதில் உள்ள தனித்துவத்தை நாம் கவனிக்க வேண்டும். உலகிலேயே தமிழீழத்தில் மாத்திரமே வழக்கு நடவடிக்கைகள் யாவும் முற்றிலும் தமிழில் நடைபெறுகின்றது. வேறு மொழிகளில் உள்ள எடுத்துக்காட்டுகள் முற்தீர்ப்புகள் போன்றவை அனுமதிக்கப்படுகின்றன. அவை யாவும் அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்களால் உண்மை மொழிபெயர்ப்பென அத்தாட்சிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் வழக்கு நிகழ்வுகள் யாவும் தமிழிலேயே பேணப்படுகின்றன. தமிழீழ நீதிமன்றுகளில் பின்பற்றப்படும் சட்டங்கள் தேசியத்தலைவரின் ஆணையின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்டவையும், உலகளாவிய ரீதியில் இயற்கை நீதி ஒப்பரவு அடிப்படையில் முற்போக்கானவையாகவும் அமைந்துள்ளன. சட்டவாக்கப் பகுதியினர் தமிழீழ சமூக, பூகோள, பொருளாதார அரசியல் சூழ்நிலைகளுக்கு ஏற்ப சட்ட அறிஞர்கள் துறைசார் நிபுணர்களின் ஆலோசனைகளின் அடிப்படையில் சட்டங்களை இயற்றுகிறார்கள், இவைகள் படிமுறையான பரிசீலனைக்குப் பின் தேசியத்தலைவரால் சட்டமாகப் பிரகடனப்படுத்தப்படுகின்றது. இந்த வகையில் கீழ்க்காணும் சட்டங்கள்வெளிவந்துள்ளன.

1. தமிழீழ சட்டக்கோவை, 2. தமிழீழச் சட்டக்கோவையின் திருத்தச் சட்டம், 3. தமிழீழத் தேசவழமைச் சட்டம், 4. தமிழீழ மோட்டார் ஊர்திகள் பதிவுச் சட்டம். 5. யாழ் குடாநாட்டில் விறகு வெட்டுவதை ஒழுங்குபடுத்தும் சட்டம், இவற்றைவிட தமிழீழ ஒறுப்புச் சட்டம், மேன்முறையீட்டு நீதிமன்ற நடவடிக்கை முறை போன்ற நூல்களும் விரைவில் வெளிவரவுள்ளன.

## சட்ட அறிக்கைகள்

தமிழீழ நீதிமன்றுகளில் நடவடிக்கைகள் உலகளாவிய ரீதியில் வளர்ச்சியடைந்த நாடுகளில் நிலவும் நடைமுறைகளுக்கு எந்த விதத்திலும் ஈடுகொடுக்கும் வகையிலேயே நடைபெறுகின்றன. உதாரணமாக ஒருவன் குற்ற ஒப்புதல் செய்தால் அதை அப்படியே ஏற்றுக்கொண்டு அதற்கென உரிய தண்டனையை வழங்குவதில்லை. நீதியாளர்கள் தங்கள் தற்துணிவு அதிகாரத்தின் அடிப்படையில் சாட்சிகளை விசாரணை செய்து அந்தக் குற்றம் எந்த சந்தர்ப்பத்தில், எவ்வித சூழ்நிலையில் நடந்தது. அதற்கு வேறுயாரும் உடந்தையாக இருந்தார்களா? முறைப்பாட்டுக்காரர் அக்குற்றம்நடைபெறுவதற்கு எந்தளவுபங்கை வகித்தார் என்பவை எல்லாம் ஆராயப்பட்டே அவைகளுக்கு ஏற்றவாறே தண்டனை வழங்கப்படுகின்றது. விசேட தீர்ப்புகள் எல்லாம் தமிழீழச் சட்ட அறிக்கைகளாக வெளிவரவிருக்கின்றன. அண்மையில் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் நடந்த வழக்கு இலக்கம் 13/94 வரவிருக்கும் மேற்படி சட்ட அறிக்கையில் காணலாம். ஒரு சிறுமி மீது பாலியல் வன்முறை புரிந்ததாக எதிரி குற்றம் சாட்டப்பட்டிருந்தார். அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டபோது, தான் அச் சிறுமியின் சம்மதத்துடன் அக்குற்றத்தைச் செய்ததாகக் கூறினார். ஆனால் மன்று அதை ஏற்காது சிறுமியையும் வைத்திய அறிக்கையையும் சாட்சியமாக எடுத்து சிறுமியின் சம்மதம் அங்கு இருக்கவில்லை என்பதை தெளிவாக ஆராய்ந்து கண்டபின் எதிரிக்கு மரண தண்டனை வழங்கப்பட்டமையை சட்ட அறிக்கையில் உள்ள தீர்ப்பில் காணக் கூடியதாக இருக்கின்றது.

கடந்த ஒரு ஆண்டு காலப் பகுதியில் தமிழீழத்தில் நீதிமன்றுகள் எவ்விதம் தமது கடமைகளை நிறைவேற்றின என்பது கீழ்க் காணும் புள்ளி விபரங்களிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

| | |
|---|---|
| மொத்தமாக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் | 3963 |
| இவற்றில் தீர்ப்பு வழங்கப்பட்டவைகள் | 1613 |
| மேன்முறையீடு செய்யப்பட்ட மொத்த வழக்குகள் | 47 |
| இவற்றில் தீர்ப்பு வழங்கப்பட்டவைகள். | 30 |

யத்துடனும் பாதுகாப்புடனும் தமிழர் தாயகத்தில் வாழ்வதற்கான ஓர் ஏற்பாட்டையே ஆகும். அதாவது தமது அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது மட்டுமே ஆகும்.

இந்நிலையில், இனப்பிரச்சினைத் தீர்விற்கு தமிழர் தரப்பில் இருந்து பிரச்சினைகள் | தடைகள் எழுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை. தமிழர் தரப்பு ஒத்துழைப்பு சாதகமாகவே இருக்கும் எனக் கருதலாம் ஆனால் புதிய பிரதமருக்கு உள்ள தடைகள் / முட்டுக்கட்டைகள் யாவும் அவர்களுடைய அதாவது சிங்களவர் தரப்பிலேயே உள்ளன.

இதில் முதலாவதாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள பிரதம மந்திரியின் கைகளுக்கு ஆட்சி அதிகாரம் முழுமையாக மாறவில்லை என்பது முக்கியமானதாகும்: புதிய பிரதமராக சந்திரிகா பதவி ஏற்றாலும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக டி. பி. விஜேதுங்கா இருப்பதினால் இனப்பிரச்சினை விவகாரத்தில் பிரதம மந்திரியின் நடவடிக்கைகள் வரையறைக்குட்பட்டதாகவே இருக்க முடியும்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவோ, அதை முன்னெடுத்துச் செல்லவோ பிரதமர் விரும்பினாலும் கூட, அதற்கேற்ற ஒரு சுமுகமான அரசியற் சூழ்நிலையை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் விருப்பின்றி அவரால் நிறைவேற்ற முடியுமா என்பது கேள்வியே. ஏனெனில் முப்படைகளின் தளபதி ஜனாதிபதி என்பது மட்டுமல்ல, பாதுகாப்பு அமைச்சும் அவரிடமே உள்ளது.

இந்நிலை இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு பிரதமரின் எல்லைகளை வரையறை செய்கின்ற அதே நேரம், இனப்பிரச்சினைத் தீர்விற்கான தமது எல்லைகளை பிரதமரும் இதுவரை தெளிவுபடுத்தவில்லை. ஆனால் அவ் எல்லைகள் குறித்து தற்பொழுது பிரதமர் கொண்டுள்ளதாகக் கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில் பார்த்தால் சிலசமயம் அவரே தனது நிலைப்பாட்டிற்கு முரண்பாடு உடையவராகவே உள்ளது போல் தெரிகிறது

இந்நிலையில் புதிய பிரதம மந்திரி இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியாகத் தீர்வு காண்பதற்கான தடைகளை வேகமாகத் தாண்டி வரவேண்டிய தேவை உள்ளதோடு இனப்பிரச்சினைத்தீர் விற்குத்தான்கொண்டுள்ள எல்லைகளையும் விரிவுபடுத்த வேண்டும். இதற்கு சிங்கள மக்கள் தாம் தடையாக இருக்கப் போவதில்லை என்பதையும் நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் உணர்த்தியுள்ளனர். ஆகையினால் ஏனைய தடைகளைத் தாண்டும் துணிவும், வேகமும் புதிய பிரதமருக்கே தேவையாகும்.

# பிரெஞ்படைகள் இன்று முற்றாக வாபஸ் பெறும்

## றுவாண்டா குறித்து பிரெஞ் ஜனாதிபதி

(பாரிஸ்)

இன்று ஞாயிற்றுக்கிழமைக்கு முன்பாக றுவாண்டாவிலிருந்து பிரெஞ் படைகள் முற்றாக வாபஸ் பெற்றுவிடும் என பிரான்ஸ் ஜனாதிபதி மித்ரோன்ட் அறிவித்துள்ளார்.

றுவாண்டாவில் அமைதி திரும்ப பிரான்ஸ் முழுநடவடிக்கையும் எடுத்தது. இப்போது அப்பொறுப்பு சர்வதேச சமூகத்திடம் விடப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

றுவாண்டாவின் பிரான்ஸ் ஆதரவு பெற்ற ஹூட்டு இன அரசு டுட்சி போராளிகளால் தோற்கடிக்கப்பட்டதையடுத்து அங்கு பிரெஞ் துருப்புகள் இருமாதங்களின் முன் அனுப்பப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# ரொட்னிகிங் விவகாரம் இருபொலிசாருக்கு சிறை

## இருவருட விசாரணையின் பின் தீர்ப்பு

(நியூயோர்க்)

இரு வருடங்களுக்கு முன் அமெரிக்காவில் கறுப்பின கார் சாரதி ரொட்னிகிங் என்பவரை கடுமையாக தாக்கியதற்காக இரு பொலிசாருக்கு நீதிமன்றம் கடூழிய சிறைத்தண்டனை விதித்துள்ளது.

இச்சம்பவம் குறித்து ஆரம்பத்தில் நடைபெற்ற விசாரணைகள் இறுதியில் தாக்குதல் நடத்திய பொலிசார் நிரபராதிகள் என விடுதலை செய்ய வழிவகுத்தது. இது பெரும் சர்ச்சைகளை கறுப்பின மக்களிடையே ஏற்படுத்தியதையடுத்து மீள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது தெரிந்ததே.

# பாலஸ்தீன சுயாட்சி பகுதி மேலும் விஸ்தரிக்கப்படும்

(டெல்அவிவ்)

பாலஸ்தீனிய சுயாட்சிப் பகுதி அடுத்த வாரம் ஜோர்டானின் ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படும் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது. இது குறித்து இஸ்ரேல் வெளிநாட்டமைச்சர் ஷிமோன் பெரஸ் யாசீர் அரபாத்துடன் பேச்சு நடத்தினார்.

கல்விசப்பந்தமான பொறுப்புக்கள் அடுத்தவாரம் முதல் பாலஸ்தீன அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. ஜோர்டானின் மேற்கு கரையில் இதுவரை ஜெரிக்கோ நகர்மட்டுமே பாலஸ்தீன நிர்வாகத்திற்கு விடப்பட்டிருந்தது ஏனைய பகுதிகளுக்கும் இந்த நிர்வாக உரிமை விஸ்தரிக்கப்படவேண்டும் என பாலஸ்தீன விடுதலை இயக்கம் கோரிவந்துள்ளது.

### ஜனாதிபதி

துள்ளார். நிர்வாகப் பொறுப்பு ஜனாதிபதியின் கையிலுள்ள இந்நிலையில், இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளில் அவர் சவாலாகவே இருப்பாரென்பதில் சந்தேகமில்லை எனவும் அது தெரிவித்தது.

பௌத்த மத அடிப்படைவாதிகளின் பிடியிலுள்ள ஜனாதிபதி, பௌத்த பிக்குகளுக்கு சார்பாகவே நடப்பார் என்பதும் தெளிவானது. தமிழீழப் போராட்டம் ஆரம்பமான சிறிமாபண்டாரநாயக்காவின் ஆட்சிக்குப் பின். அதனைத் தீர்க்கும் முயற்சிகளில் அவரது மகள் இறங்கியுள்ளார் எனவும் வெரித்தாஸ் அறிவித்தது.

---

### அமைச்சு

தேர்தல் அறிக்கையை இழிவுபடுத்தி பேசியுமுள்ளார். எனவே முதலில் பதவி விலக்கப்படும் நபர் இவராக இருக்கலாம்.

ஜனாதிபதியின் கீழ் பாதுகாப்பு அமைச்சின் பொறுப்பு இருந்தாலும் பாதுகாப்பு அமைச்சிலும் பலர் மாற்றப்படலாம் நடைபெற்ற தேர்தல் வாக்குப் பதிவின்போது பொலிசார் ஓரளவு நடுநிலைமையைக் கடைப்பிடித்த போதிலும் அதிகார வர்க்கமும் பொதுமக்களைப் போல் சிந்திப்பதாகஎண்ணத்தோன்றுகிறது

பொதுச்சேவை ஆணையம் ஒன்றை அமைப்பதன் மூலம் அதிகார வர்க்கத்தை அரசியல் தலையீட்டிலிருந்து விடுவிக்கவும் புதிய அரசு முயன்று வருவதாகவும் பி.பி. ஸி மேலும் தெரிவித்தது

# பாகிஸ்தான் செல்லவிருந்த புளுட்டோனியம் மீட்பு

(போன்)

அணுகுண்டு தயாரிப்பிற்கு பயன்படும் தடைசெய்யப்பட்ட புளுட்டோனியம் ஜேர்மனியில் கண்டுபிடிக்கப்பட்டமையானது பாகிஸ்தான் அணுகுண்டு தயாரிப்பதற்காக புளுட்டோனியத்தை இரகசியமாகப் பெற்று வருவதைஊர் ஜிதப்படுத்தியுள்ளதாகஇந்தியா குற்றஞ்சாட்டியுள்ளது.

ஜேர்மனியில் கண்டுபிடிக்கப்பட்ட புளுட்டோனியத்தின் ஒருபகுதி பாகிஸ்தான் செல்லவிருந்ததாக பெர்லின் பொலிசார் தெரிவித்துள்ளனர். எனினும் இது குறித்து தமக்கு எதுவும் தெரியாது என பாகிஸ்தான் கூறியுள்ளது.

# றுவாண்டா அகதிகள் சயரினுள் மேலும் நுழைவு

றுவாண்டா அகதிகள் நிமிடத்திற்கு 30 பேர் என்ற விகிதத்தில் அயல் நாடான சயரில் குவிந்து கொண்டுள்ளனர். அகதிகள் வருகை மேலும் மோசமானால் எல்லையை மூடவேண்டியிருக்கும் என சயர் அரசாங்கம் கூறியுள்ளது.

றுவாண்டா அகதிகளுக்கான பாதுகாப்பை வழங்கிய பிரெஞ் துருப்புகள் வாபஸ் பெறப்படுவதினாலேயே அதிக அகதிகள் அச்சம் காரணமாக எல்லை கடந்து தப்பிஓடிவருகின்றனர். இதுவரை சயரினுள் மூன்று லட்சம் அகதிகள் குவிந்துள்ளனர்.

## பாதிப்புறும்

தென்னாபிரிக்க பாராளுமன்றத்தின் தெரிவு குழுக்களில் இருந்து எப். டபிள்யு டி கிளேர்க்கின் தேசியகட்சி விலகியுள்ளது முக்கியத்துவம் இல்லாத நான்கு குழுக்களின் தலைமை பொறுப்பு தமது கட்சிக்கு தரப்பட்டதால் இம் முடிவு மேற்கொண்டதாக டிகிளேர்க் தெரிவித்தார்.

ஜனாதிபதி மண்டேலாவின் தேசிய ஒருமைப்பாட்டு அரசில் டிகிளேர்க்கின் இம்முடிவு பெரும் பாதிப்பை ஏற்படுத்தலாம் எனக் கூறப்படுகிறது.

## புலிகளின்குரல் நிகழ்ச்சி நிரல்

**1994-08-21**
**ஞாயிறு இரவு**

08.01- இசையரங்கம்- நிகழ்ச்சியை அலங்கரிப்பது செஞ்சிற் கச்சேரி
08.30- செய்திகள்
08.40- தொடர் நாடகம்- இலங்கைமண்- 37-ம் அங்கம்

**1994-08-22**
**திங்கள் காலை**

07 02- மாவீரவணக்கம்
07.15- நீங்கள் கேட்டவை
07 30- செய்திகள்
07.35- பத்திரிகைச் செய்திகள்
07.40- நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

# 10,000 வாக்கில் 9 உறுப்பினர்கள் பெற்றுக் கொண்டது நியாயம்தானா?

## டக்ளஸ் தேவானந்தாவிடம் பி. பி. ஸி செய்தியாளர் கேள்வி

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் தேர்தல் நடந்த இடங்களில் எண்பது வீதமான வாக்காளர்கள் எமக்கு ஆதரவளித்தனர், ஏனைய பகுதிகளில் தேர்தல் நடந்தாலும் மக்கள் சரியான பக்கம் நிற்பார்கள் என ஈ.பி.டி.பி தலைவர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

பி. பி.சிக்கு வழங்கிய பேட்டியொன்றில்,

யாழ்ப்பாண வாக்காளர்களின் எண்ணிக்கை ஆறு லட்சம் ஆனால் இந்தத் தேர்தலில் வாக்காளித்தோரின் தொகை பதின்மூவாயிரம் இதில் உங்களுக்கு கிடைத்திருக்கும் வாக்குகள் சுமார் பத்தாயிரம், இந்தப் பத்தாயிரம் வாக்குகளுடன் ஒன்பது பாராளுமன்ற உறுப்பினர்கள் வந்திருக்கிறீர்கள் யாழ்ப்பாணத்தேர்தல் ஒரு கேலிக்கூத்து என பரவலாக நம்பப்படுகிறது, தார்மீக ரீதியாக இதை ஒரு வெற்றியாக கருதுகிறீர்களா? எனக் கேட்கப்பட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். பத்தாயிரம் வாக்குகளுக்கு ஒன்பது பாராளுமன்ற உறுப்பினர்களை பெற்றது சரி, நியாயம் என உங்களுக்கே படுகின்றதா எனக் கேட்ட போது சரியானது நியாயமானது என்பதை விட இதை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதிலேயே நாம் அக்கறையாக உள்ளோம் என்றார்-

கேள்வி: ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களை களையப்போவதாகபுதிய பிரதமர் கூறியிருக்கிறார். நீங்கள் ஒரு ஆயுதக் குழு உங்களிடமிருந்து ஆயுதங்கள்களையப்பட்டால் என்ன செய்வீர்கள்?

பதில்; எமது ஆயுதங்களை மக்களைக் காக்கவே பயன்படுத்தியுள்ளோம், இந்நிலையே தொடரும்

கேள்வி; ஆயுதங்களை அழிவு வேலைகளுககாக மிரட்டலுக்காக நீங்கள் என்றுமே பயன்படுத்தியதில்லையா?

பதில்: இல்லை

கேள்வி: ஆயுதங்களின்றி உங்களால் செயற்பட முடியுமா?

பதில்: நாம் ஆயுதத்தின் மேற்கொண்ட காதலால் ஆயுதம் ஏந்தவில்லை எமது நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டால் இவை எமக்குத் தேவையற்றதாகிவிடும்-

கேள்வி முதன் முதலாகப் பாராளுமன்றம் செல்லவிருக்கிறீர்கள்? உங்களது அரசியல் நோக்கம் என்ன?

பதில் எமது கொள்கைகள் புதியவை அல்ல, ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்கள் வாழும் நிலையை ஏற்படுத்தும் வழிமுறைகளில் ஒன்றே பாராளுமன்றப்பாதை

கேள்வி பொதுமக்கள் முன்னணி சரியான தீர்வில் ஈடுபட்டால் ஆதரவுவழங்கத் தயாராக இருப்பதாக கூறும் நீங்கள், விசுவாசம் மாறி கட்சி மாறத் தயாராயிருக்கிறீர்கள் தானே?

பதில் இது கட்சி மாறலல்ல சரியான நேரத்தில் சரியானதை அவசியமானதைச் செய்கிறோம் என்பதே அர்த்தம்

கேள்வி புலிகளுடன் புதிய பிரதமரின் பேச்சுக்கு ஒத்துழைப்பு வழங்குவீர்களா?

பதில் உளப்பூர்வமாக புலிகள் ஜனநாயக வழிக்கு வந்தால் நாங்கள் வரவேற்போம் இதை ஒரு தந்திரமாக புதிய அரசு செய்ய இடமளிக்க மாட்டோம்

கேள்வி தமிழர்பிரச்சினைக்கான தீர்வு, உங்கள் கட்சியையும், தனிப்பட்ட முறையில் உங்களையும் பாதிப்பதாக இருந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?

பதில் நாங்கள் மக்களின்பக்கம்தான் நிற்போம் எனக்கூறினார் டக்ளஸ் தேவானந்தா

## இன்று மஞ்சம்

(கொழும்புத்துறை)

நல்லூர் கந்தசுவாமி கோவிலில் இன்று 21 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை 10 ஆம் திருவிழாவாக மாலை 5-00 மணிக்கு மஞ்சத் திருவிழா நடைபெறும்.


யாழ். ஸ்ரீதர் அகலத்திரையில்

அனேக ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க

தினசரி காலை 10-30 மணிக்கு மட்டும்

"மண்ணுக்காக"

தினசரி மாலை 4-00 மணி 6-00 மணி காட்சிகளாக

CHUCK NORRIS நடித்த

BRAD-DOCK

MISSING IN ACTION - III

(தாக்குதல் சித்திரம்)

ஒவ்வொரு சனி, ஞாயிறு தினங்களில்

பி. ப. 2-00 மணிக்கு மட்டும்


## உயர்தர

பர் கா- மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

இன்று காலை பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்துசேரவுள்ள "நரோமா" கப்பலிலே மேற்படி வினாத்தாள்கள் எடுத்துவரப்படவுள்ளன.

(பா). (தி)

## கரையோர

மூடித்தனமாக பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டதில் வல்வெட்டித்துறை கடற்பகுதியில் தொழில் செய்த மீனவர்கள் மீன்பிடி உபகரணங்களை கடலில் கைவிட்ட நிலையில் நீந்திக் கரையை வந்தடைந்தனர்.

(யோ)

## வடமராட்சி

இடத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை குலசிங்கம் (38) என்பவரே படுகாயமடைந்தார்-

இவரருகில் தொழில் செய்து கொண்டிருந்த மீனவர்கள் மீதும் கடும் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது- மேலும் ஏற்பட்ட சேத

## நரோமா

8மணிக்கு முன்னர் பருத்தித்துறை துறைமுகத்திற்கு சமுகமளிக்கும்படி யாழ். அரச அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேற்படி கப்பல் இன்று காலை பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்து சேரவுள்ளது.

இக்கப்பல் இன்றே பயணிகளுடன் திருகோணமலை

## கிரிக்கற் போட்டி

கோவிந்தபிள்ளை சபாரட்ணம் ஞாபகார்த்த மூன்று நாள் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்ட முடிவின் போது சென்றலைட்ஸ் அணியினர் தம் இரண்டாவது இன்னிங்ஸில் 3 இலக்கு இழப்பிற்கு 56 ஓட்டங்கள் பெற்றுள்ளார்கள். ஏற்கனவே ஜொனியன்ஸ் தம் முதலாவது இன்னிங்சில் சகல இலக்குகளையும் இழந்து 341 ஓட்டங்கள் பெற்றிருந்தனர். இதில் சுதேசன் 103 ஓட்டங்கள் பெற்றிருந்தார். சென்றலைட்ஸ் அணியினர் தம் முதலாவது இன்ஸிங்ஸ்சில் 173 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தனர். இன்று ஆட்டத்தின் இறுதி நாளாகும்

## பெறுமதி

பாக்கிகள், எக்ஸ்றேகதிர் கருவி என்பன உட்பட பல பொருட்களை மூன்று வருடங்களுக்கு முன்னர் அன்பளிப்பு செய்தமை தெரிந்ததே

இவ்வுபகரணங்களை எடுத்து வருவதில் ஏற்பட்டுள்ள தாமதம் பற்றி யாழ். போதனா மருத்துவமனை பணிப்பாளரிடம் கேட்ட போது தற்போது கொழும்பில் இருக்கும் பொருள்களை எடுத்து வருவதற்கு பாரிய கப்பல் தேவை என்றும் தற்போது சேவையில் உள்ள கப்பலில் இவற்றை எடுத்து வர முடியாதுஎனவும்தெரிவித்தார். (சி)

## தேர்தல்

கொல்லப்பட்டதாக இந்திய வானொலி தெரிவித்துள்ளது

இதேவேளை சட்டவிரோதமான வழிகளில் வெற்றியைக் கொண்டாட வேண்டாம் என பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க தனது ஆதரவாளர்களைக் கேட்டுள்ளதாக அது மேலும் தெரிவித்தது.

தேர்தல் முடிவுற்ற 3 நாட்களுக்குள் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் குறைந்த பட்சம் ஆறுபேர் வரை கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளதாக பொலிசார்தெரிவித்துள்ளனர்

இதேவேளை பொலநறுவை அனுராதபுரம், புத்தளம். மொனறாகலை ஆகிய மாவட்டங்களிலும் நாரன் வெல, குளியாப்பிட்டிய வீரபிட்டிய ஆகிய பிரதேச செயலகர் பிரிவுகளிலும் நேற்று நண்பகல் 12 மணியிலிருந்து ஊரங்குச் சட்டம் அமுலுக்கு வந்துள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் நேற்று மாலை ஆறு மணிக்கு கொண்டு வரப்பட்ட ஊரடங்குச் சட்டம்

## யாழ்.

களிப்பு நடத்த ஏற்பாடுகள் செய்ய முயல வேண்டாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்' வன்னி தவிர்ந்த இடங்களில் தேர்தல்கள் நியாயமாக நடத்தப்பட்டன என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்களது அறிக்கை பற்றி பி. பி. சி. கொழும்புச் செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னி கருத்துத் தெரிவிக்கையில்.

வாக்களிக்கப்பட்ட சிறு தொகை வாக்குகள் மூலமே யாழ்ப்பாணத்திலிருந்து பாராளுமன்ற பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஈ. பி. டி. பி. காவலில் இருந்த தீவுப் பகுதிகளில் தான் அதிக வாக்குப் பதிவு நடை பெற்றது

தேர்தல் கண்காணிப்பாளர்கள் தேர்தல் நடந்த சமயத்தையே கணக்கில் கொண்டிருந்தார்கள் தேர்தலுக்கு முன்பு அரசின் முறைகேடுகளை பார்வையாளர்கள் கவனத்திற்கொள்ளவில்லை யாழ்ப்பாணத்தில் நேர்மையாகநடக்காதவாக்கெடுப்பின் மூலம், பாராளுமன்ற இட ஒதுகீடு உருமாறியிருப்பதை சுட்டிக்காட்டாமல் விட்டுவிட்டார்கள் என்றும் ஜோர்ஜ் ஆர்னி தெரிவித்திருக்கிறார்:

## சந்திரிகா

பூர்வமான பிரசார இயந்திரம் கூட எந்தவித தடங்கலுமின்றி தொடர்ந்து செயற்பட்டது. சந்திரிகாவுக்கு எதிராக செயற்பட்டு வந்த டெயிலிநியூஸ் கூட நேற்றைய பதிப்பில் எதுவித தர்மசங்கடமும், தயக்கமும் இல்லாமல் முதல் பக்கத்திலேயே புதிய பிரதமரின் புன்னகையை வர்ணித்து அந்தப் புன்னகையால் மக்களை அவர் கொள்ளை கொண்டுவிட்டார் எனக் கூறுகிறது. இவ்வாறு பி பி ஸியின் கொழும்பு முகவர் ஜோர்ஜ் ஆர்னி தெரிவித்துள்ளார்.

அவர் ஆட்சி மாற்றம் குறித்து மேலும் தெரிவிக்கையில், தேர்தலுக்கு பின் ஏற்பட்ட சில மோதல்கள் சூழ்நிலையில் பாதிப்பை ஏற்படுத்தத்தான் செய்தன. ஆனால், இப்போதைக்கேனும் புதிய ஆட்சியிடம் மக்களுக்கு ஏராளமான எதிர்பார்ப்பும் நல்லெண்ணமும் இருக்கின்றன. முன்னைய அமைச்சர்களில் நான்கு பேர் தேர்தலில் தோற்றுவிட்டார்கள். இன்னும் பலர் தங்களது தொகுதிகளில் ஆதரவை இழந்துவிட்டாலும், மாவட்டத்தில் கிடைத்த ஓட்டு மொத்த

## அரசியல்

நேற்றைய தினம் நாட்டுமக்களுக்கு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்த அவர் அரசியல் பேச்சுவார்த்தைகள் மூலம் வடக்கு-கிழக்கில் நடந்து கொண்டிருக்கும் யுத்தத்தை நிறுத்துவதற்கான ஆணையை நாம் மக்களிடம் கேட்டிருந்தோம் அந்த ஆணையை மக்கள் எமக்குத் தந்து விட்டனர்.

தற்போது நாம் வடக்குக் கிழக்குக்கு நேசக்கரம் நீட்டுகிறோம் நாம் எந்த உணர்வில் இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு வடக்குக்கிழக்கு மக்களுக்கு நேசக்கரம் நீட்டுகிறோமோ அதை அதே நோக்கில் அவர்களது தலைவர்களும் ஏற்றுக் கொள்வார்கள் என எதிர் பார்க்கின்றோம்.

அரசியல் பழிவாங்கல்களும் ஊழல்களும், பயமுறுத்தல்களும் நிறைந்து விட்ட இந்த நாட்டை நல்லமுறையில் கட்டி எழுப்புவோம் என மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை இங்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

கடந்த இருசகாப்தங்களாக எமது ஆதரவாளர்கள் பலர் எத்தகைய துன்பங்களுக்கு உள்ளானார்கள் என்பதை நாம் நன்கு அறிவோம். அரசியல் பழிவாங்கல்களால் பல உயிரிழப்புகள், சொத்திழப்பு, தொழில் இழப்புகளால் மக்கள் இன்றும் அவதியுறுகின்றனர். என்றும் தெரிவித்தார்.

கடந்த காலத்து பேரழிவு நிறைந்த அந்த நச்சு வட்டத்தை நாம் தகர்த்தெறிய வேண்டும். எமது ஆதரவாளர்களை வன்செயல்களைத் தவிர்க்கும் படி வேண்டுகிறேன்: ஜனநாயக கோட்பாடுகளுடைய நல்ல சமுதாயத்தைக் கட்டிஎழுப்புவதற்கு உரிய வேலைகளை இப்போதிருந்தே ஆரம்பிப்போமாக; என்றார்.

## தெற்கில்

அடைந்தாலும் விடுதலைப் புலிகளின் தலைவர், தனித் தமிழ் ஈழம் வேண்டுமென்ற கோரிக்கையைத் தவிர வேறு தீர்வுக்கு ஒப்புக்கொண்டாலன்றி தீர்வு ஏற்படுவது சாத்தியமில்லை என மேலும் அவர் தெரிவித்தார்.

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம்: 11 - 11 - 1939

மறைவு: 20 - 8 - 1994

### திரு. சிவகுரு விசாகமூர்த்தி


20 - 8 - 94 அன்று மரணமான எமது சங்க ஊழியனாகிய சிவகுரு விசாகமூர்த்தி அவர்களின் குடும்பத்திற்கு எமது கண்ணீர்அஞ்சலியை செலுத்துகிறோம்- இவ்வறிவித்தலை ஏற்று சகலரும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

பலநோ. கூ. சங்கம், தெல்லிப்பளை:

தலைவர், இயக்குனர் சபை, பணிப்பாளர், பணியாளர்

(9169)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



**MISSING IN ACTION - III**
(தாக்குதல் சித்திரம்)

ஒவ்வொரு சனி, ஞாயிறு தினங்களில்
பி. ப. 2-00 மணிக்கு மட்டும்

''ஒளி வீச்சு''
யூன் - 94
காண்பிக்கப்படும்.
(சி-10131)

வடமராட்சி இடத்தைச் சேர்ந்த கணபதிப் பிள்ளை குலசிங்கம் (38) என்பவரே படுகாயமடைந்தார்-

இவரருகில் தொழில் செய்து கொண்டிருந்த மீனவர்கள் மீதும் கடும் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது- மேலும் ஏற்பட்ட சேத விபரங்கள் இதுவரை கிடைக்கவில்லை- இக்கடற்பரப்பில் கடற்படையினரின் தாக்குதல் சம்பவங்கள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன-

(யோ)

துறை துறைமுகத்திற்கு சமுகமளிக்கும்படி யாழ். அரச அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேற்படி கப்பல் இன்று காலை பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்து சேரவுள்ளது.

இக்கப்பல் இன்றே பயணிகளுடன் திருகோணமலை நோக்கி புறப்பட்டுச் செல்லும் என யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

குளியாப்பிட்டிய வீரபிட்டிய ஆகிய பிரதேச செயலகர் பிரிவுகளிலும் நேற்று நண்பகல் 12 மணியிலிருந்து ஊரங்குச் சட்டம் அமுலுக்கு வந்துள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் நேற்று மாலை ஆறு மணிக்கு கொண்டு வரப்பட்ட ஊரடங்குச் சட்டம் இன்று அதிகாலை 5மணிக்கு நீக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

டம் மக்களுக்கு ஏராளமான எதிர்பார்ப்பும் நல்லெண்ணமும் இருக்கின்றன. முன்னைய அனமச்சர்களில் நான்கு பேர் தேர்தலில் தோற்றுவிட்டார்கள். இன்னும் பலர் தங்களது தொகுதிகளில் ஆதரவை இழந்துவிட்டாலும், மாவட்டத்தில் கிடைத்த ஒட்டு மொத்த வாக்குகளினால் தப்பித்து நாடாளுமன்றத்தில் நுழைகிறார்கள் எனத் தெரிவித்தார்.


## ஜெயா அழகுமாடம்

விற்பனை அகமும் காட்சி அகமும், நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்திற்கு வடக்கு வீதியில் அமைந்துள்ளது. என்பதை வாடிக்கையாளர்கட்கு அறியத்தருகின்றோம்.

(சி-10158)


## பண்டத்தரிப்புப் பரிஷ் ப.நோ.கூ. சங்கம் (மட்டுப்படுத்தப்பட்டது)

## விஷேட பொதுக்கூட்டம்

**28-08-1994**

மேற்படி சங்கத்தின் விஷேட பொதுக்கூட்டம் 1994-08-28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு சங்கத் தலைவர் திரு. மா. புலேந்திரன் அவர்கள் தலைமையில் சங்கக் காரியாலய மண்டபத்தில் கூட்டப்பெறும்.

விஷேட பொதுக்கூட்ட நிகழ்ச்சி நிரல் பொதுச் சபைப் பிரதிநிதிகளுக்கு கிடைக்கக் கூடிய ஒழுங்குகள் சங்கத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நிகழ்ச்சி நிரல் கிடைக்காத பிரதிநிதிகள் சங்கச் செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

பொதுச் சபைப் பிரதிநிதிகளை தவறாது சமுகம் தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மா. புலேந்திரன் — தலைவர்
ஆ. நாகராசா — செயலாளர்
(சி10148)


கடந்த ஒருவருட காலமாக உங்களுடன் உலகை வலம் வந்த,

உலக உலா தரும் ஓர் இனிய ஆச்சரியம்!!

இப்போது நாம் உங்களை நவீன உலகிற்கு அழைத்துச் செல்கிறோம்

# ஆம்!!

உள்ளே உலகின் அண்மைக் காலத்து அறிவியல் விஞ்ஞான தொழில்நுட்பக் கண்டுபிடிப்புக்களின் அரியதகவல்கள்

வெள்ளித்தட்டுப் போன்ற கவர்ச்சி மிக்க பல வர்ண அட்டையுடன்,


உலக உலாவின் முதலாண்டுச் சிறப்பிதழ் கைக்கடக்கமான அழகிய அமைப்பில் வெளிவந்துள்ளது

**விலை 25 ரூபா தான்**

அறிவு
அழகு
புதுமை

உடனே ஓடிச்சென்று அண்மையில் உள்ள புத்தகசாலையில் உங்கள் சிறப்பிதழைப் பெற்றுக் கொள்ளுங்கள் தாமதிக்காதீர்கள்!!

(சி10141)

## மேஜர் டயஸ் கந்தசாமி

[மயில்வாகனம் தவராஜா]
முன்னாள் அம்பாறை,
யாழ். மாவட்ட அரசியற் பொறுப்பாளர்

தாய் மடியில் 14-06-1962 — தாயக மண்ணில் 21-08-1989

நீ சென்றது போலவே இல்லை,
காலச்சக்கரம் உருண்டு உருண்டு ஓடினும்
நீ சென்றது போலவே இல்லை.
எம்மில் எங்கும் நீயிருக்கின்றாய்
நீ எமக்குள்ளேயே வாழ, உம் இலட்சியத்துடன்
நாம் உமக்காகப் பயணிக்கின்றோம்.

29, றக்கா றோட்,
யாழ்ப்பாணம்.

மனைவி, மகன்,
உறவினர், நண்பர்கள்

(9166)

## மரண அறிவித்தல்

### திருமதி ஜெகதீஸ்வரன் லோகேஸ்வரி

சங்குவேலியைப் பிறப்பிடமாகவும், நாச்சிமார்கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெகதீஸ்வரன் லோகேஸ்வரி நேற்று சனிக்கிழமை காலமானார். அன்னார் பாலகிருஸ்ணர் - தங்கம்மா தம்பதிகளின் புதல்வியும், தி. ஜெகதீஸ்வரனின் (ஈசன் பத்தர்) அன்பு மனைவியும், அபிநயா, றஜித் ஆகியோரின் பாசமிகு தாயாரும், உதயகுமார், சதானந்தகுமார், பேரின்பராணி, ஜெயராசா, சிவஜோதிமலர், கமலேஸ்வரி, ஆகியோரின் அன்புச் சகோதரியும், டெய்சிராணி, மகேஸ்வரன், ரவிக்குமார், ஜெனோராணி, உதயகுமார் ஆகியோரின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 21-08-94 பிற்பகல் 2மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

579, நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
தி. ஜெகதீஸ்வரன்
ஈசன் பத்தர்
(கணவர்)

(9168)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம்21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது